தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

---

செயல்முறை ஆணை எண். 4437/டி3/2022, நாள்: 07.12.2023

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – (லேட்) திரு.வீ.பழனி, குடிநீர் விநியோகிப்பவரின் வாரிசுதாரர் (மகன்) திரு.பழ.கார்த்திகேயன், என்பவருக்கு கருணை அடிப்படையில் காரைக்குடி, அழகப்ப செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – ஆணையர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.40. உயர்கல்வித் (சி2)த் துறை, நாள் 20.11.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், காரைக்குடி, அழகப்ப செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 27.01.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.பழ .கார்த்திகேயன், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– கொ. வீர ராகவ ராவ்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
திரு.பழ.கார்த்திகேயன்,
இளநிலை உதவியாளர்,
அழகப்ப செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி,
காரைக்குடி (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்,
அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை

டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவி இயக்குநர் (நிருவாகம்)

11 JAN 2024

<u>சுருக்கம்</u>

தொழில்நுட்பக் கல்வித்துறை – கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் குடிநீர் விநியோகிப்பாளராக பணியாற்றிய திரு.வீ. பழனி, என்பவர் பணியிடை மரணமடைந்ததையடுத்து அவரது வாரிசுதாரர் (மகன்) திரு.பழ.கார்த்திகேயன், என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>உயர்கல்வி (சி2) த் துறை</u>

அரசாணை (3ப) எண்.40

நாள். 20.11.2023.
சோபகிருது வருடம், கார்த்திகை - 04
திருவள்ளுவர் ஆண்டு - 2054
<u>படிக்கப்பட்டவை</u>:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக்கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண். 41529/டி3/2019, நாள்.24. 01.2022.
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண். 4437/டி3/2022, நாள். 22.06.2022.

--------

<u>ஆணை</u>:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் குடிநீர் விநியோகிப்பாளராகப் பணியாற்றிய திரு.வீ.பழனி என்பவர் பணியிலிருக்கும் போது 10.07.2009 அன்று பணியிடை மரணமடைந்துவிட்டதால், அவரது மகன் திரு.பழ.கார்த்திகேயன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரி 23.10.2009 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால்

வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது என்றும், இவர் எஸ்.எஸ்.எல்.சி படிப்பை மார்ச் - 2003-ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அன்னாரின் பிறந்த தேதி 15.12.1987 ஆகும் என்றும் தெரிவித்து, திரு.பழ.கார்த்திகேயன், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவித்து, திரு பழ. கார்த்திகேயன், காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசினர் பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 27.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. பழ. கார்த்திகேயன் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் குடிநீர் விநியோகிப்பாளராகப் பணியாற்றிய திரு.வீ. பழனி என்பவர் பணியிடை மரணமடைந்ததையடுத்து கருணை அடிப்படையில் காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசினர் பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள அவரது வாரிசுதாரான (மகன்) திரு.பழ.கார்த்திகேயன், என்பவர் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின் படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை மனிதவள மேலாண்மைத் துறையின் இசைவுடன் efile 1443/2023-C2, உயர்கல்வித் துறை, நாள் 20.11.2023-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
முதல்வர், அழகப்பா செட்டியார் அரசினர் பொறியியற் மற்றும்
தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி,
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
சம்பந்தப்பட்ட தனியர்
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)

நகல்
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/11/2023
பிரிவு அலுவலர்.